# காமராஜரின் பன்முக ஆளுமை



பதிப்பாசிரியர்

முனைவர் கா.ஸ்ரீதர்

வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)
(தேசிய தர மதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது)
விருதுநகர்

Scanned with CamScanner

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | காமராஜரின் பன்முக ஆளுமை |
| முதற்பதிப்பு | : | ஜீலை - 2018 |
| பதிப்பு & வெளியீடு | : | வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி) |
| மின்னஞ்சல் | : | support@vhnsnc.edu.in |
| வலைதளம் | : | www.vhnsnc.edu.in |
| ISBN No | : | 978-93-81723-87-6 |
| புத்தக அளவு | : | 1 x 4 |
| பக்கங்கள் | : | 375 |
| விலை | : | ரூ. 250 |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கா.ஸ்ரீதர் வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி) |
| அச்சிட்டோர் | : | முத்து பிரிண்டர்ஸ், விருதுநகர் |


(இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைக் கருத்துகளுக்கு அந்தந்தக் கட்டுரையாளர்களே முழுப்பொறுப்பாளர்கள்)

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 31. | சோ.முத்தமிழ்ச்செல்வன்<br>அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி | 113 |
| 32. | D.ஜெமிலா மார்ஷல்<br>மார்கிரிகோரியஸ் கல்லூரி | 122 |
| 33. | ச.முருகேசன்<br>அழகப்பா அரசு கலைக்கல்லூரி | 129 |
| 34. | சி. சொர்ணமாலா<br>பாத்திமா கல்லூரி | 135 |
| 35. | சு.மகேஷ் பிரியா<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 141 |
| 36. | ரா. மோகன்ராஜ்<br>விவேகானந்தர் கல்லூரி | 145 |
| 37. | அ.ஜெம்சி அசும்தா<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 151 |
| 38. | மெர்ஷி ஏஞ்சலா<br>பாத்திமா கல்லூரி | 156 |
| 39. | செ.துர்காதேவி<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 162 |
| 40. | அர.சுதா<br>இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 166 |
| 41. | மு.முகமது யாசர் அராபத்<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 172 |
| 42. | எஸ்.மஹாலட்சுமி<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 177 |
| 43. | ஜோ. சகாய பவுலின<br>பாத்திமா கல்லூரி | 182 |
| 44. | இரா.லதா<br>இ.ம.கோ.யாதவா மகளிர் கல்லூரி | 187 |
| 45. | லெ.அலமேலு<br>ஏ.வி.ச.கல்லூரி | 194 |
| 46. | மு.தமிழ்ச்செல்வி<br>இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி | 201 |

Scanned with CamScanner

# 34. படிக்காத மேதையின் பன்முக ஆளுமை

முனைவர் சி. சொர்ணமாலா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
மதுரை .

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கர்மவீரர் காமராஜர். உண்மையையும் நேர்மையையும் இரு கண்களெனக் கொண்டு எளிமை, சுறுசுறுப்பு, அன்பு, கருணை, இரக்கம், தூய்மைகளையே தம் படைகளாகக் கண்டு தேசம் தழைக்க தன்னையே தியாகம் செய்த தலைமகன்ளூ தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பண்புடையார் காமராஜர். அன்னாரின் ஆளுமைப் பண்புகளை வெளிக்கொணர்கிறது இக்கட்டுரை.

**கல்வி மேம்பாடு தந்த கர்மவீரர்**

ஒரு நாட்டின் உயரிய வளர்ச்சிக்கு உறுதுணையாவது கல்வி. அதனால்தான் சஷஎண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் ⊛ என்கிறார் ஔவை.

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து - நல்லம் யாம் என்னும்**
**...........................................................**
**கல்வியழகே யழகு.**

என்கிறது நாலடியார். இத்தகு கல்வியின் மகத்துவத்தை அறிந்ததாலோ என்னவோ, தன் வாழ்க்கை அனுபவத்தால் நாட்டையே கல்வி வளர்ச்சியுடையதாக மாற்ற விரும்பினார் காமராஜர். 1954-ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் தொடக்கக்கல்வி நிலை குறித்து அறிவதற்காக ஓர் உயர்மட்டக் குழுவை டாக்டர் அழகப்பச் செட்டியார் தலைமையில் காமராஜர் நியமித்தார். தமிழ்நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு போதிய பள்ளிகள், அதன் நிலை, ஆசிரியர் எண்ணிக்கை, ஊதியம், பணிப்பாதுகாப்பு, மேம்பாட்டு வழி ஆகியவற்றை ஆராய்ந்த இக்குழு 1955ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தனது அறிக்கையை அரசிடம் அளித்தது.

அறிக்கையின் விளைவாகக் கல்வி வளர்ச்சியில் புதுமையைப் புகுத்தினார் கர்மவீரர். அதன்படி 500 பேர் வாழ்கின்ற சிற்றூர் தோறும் பள்ளிகள் நிறுவப்பட்டன. அதிகாரிகள் ஊர் ஊராகச்